*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.07

# The drama structure and Performance of the 'Pothaiththurai' play

**Kesika Varatharasa*,**
Assistant Lecturer, Department of fine Arts, Eastern University, Sri Lanka.
*Corresponding Author Email: kkesika678@gmail.com.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

## ABSTRACT

The Play "Pothaiththurai" is a master's scripted of the Eastern University the lecture Dr. S. Chandrakumar. This study is based on this play. This study mainly focused on addiction. Drug abuse is a common problem identified among today's young generation. Beyond the legal restrictions, it is being used everywhere by all genders, regardless of age. In this, the effects of addiction, especially among school and university students, are discussed. Methods of getting rid of it. Methods of action to be taken by parents, security forces, doctors, police, etc. this play focuses on getting rid of this addiction with the information to be given to the society and the activities related to it. This study is also based on this. This study is participatory research study.

***KEYWORDS:*** *Drugs, school, university, society, violation of rules, laws, awareness, awakening, stage preparation.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Tamilmanam

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

# போதைத்துறை நாடகத்தின் கட்டமைப்பும் ஆற்றுகையும்

* **கேசிகா வரதராசா,** உதவி விரிவுரையாளர், நுண்கலைத் துறை,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

மின்னஞ்சல்: Kkesika678@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*"போதைத்துறை" நாடகமானது கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சு. சந்திரகுமார் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டது. இந் நாடகத்தை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகின்றது. இந்த ஆய்வு பிரதானமாக போதையை மையப்படுத்தியது. போதைப்பொருட்பாவனை இன்றைய இளம் தலைமுறையினரிடம் அடையாளம் காணப்பட்ட பொதுப் பிரச்சினையாக உள்ளது. சட்ட வரையறைகளுக்கு அப்பால் இன்று வயது எல்லையைத் தாண்டி அனைத்து பாலினராலும் அனைத்து இடங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் போதையால் ஏற்படும் பாதிப்புக்கள் குறிப்பாக பாடசாலை, பல்கலைக்கழக மாணவர் மத்தியில் எப்படி பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது, அதிலிருந்து விடுபடும் முறைகள், பெற்றோர், பாதுகாப்புப் பிரிவினர், வைத்தியர், காவல்துறை போன்றனர் செயற்பட வேண்டிய முறைகள், சமூகத்திற்குக் கொடுக்க வேண்டிய தகவல்கள், அது தொடர்பான செயற்பாடுகள் என்பவற்றைக் கொண்டு இப் போதையிலிருந்து விடுதலை பெறுவதை மையப்படுத்தியதாக இந்த நாடகம் காணப்படுகிறது. இதை ஒட்டித்தான் இவ் ஆய்வும் அமைகின்றது. இந்த ஆய்வு பங்குகொள் ஆற்றுகை மைய ஆய்வாகக் காணப்படுகின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *போதைப் பொருட்கள், பாடசாலை, பல்கலைக்கழகம், சமூகம், விதிமுறை மீறல், சட்டங்கள், விழிப்புணர்வுகள், விழிப்படைதல், அரங்க தயாரிப்பு.*

***ஆய்வு நோக்கம்:*** *போதைத்துறை நாடகத்தில் வெளிப்படும் விழிப்புணர்வுக் கருத்துக்களை பாடசாலை, பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்துதல்.*

*ஆய்வுப் பிரச்சினை: போதைத்துறை நாடக ஆற்றுகை முறையினூடாக வெளிப்படும் கருத்தாக்கங்கள் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுகின்றபோது அவை தொடர்பான புரிந்துணர்வுகள் முழுமையாக சென்றடையுமா? என்பது தொடர்பாக அமைகின்றது. அத்துடன் இப் போதைப் பாவனையால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அதிலிருந்து தாமாகவே மீண்டு வந்து தம்மை பாதுகாத்துக் கொண்டு எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பார்களா? என்பதுமாகும்.*

**அறிமுகம்**

*மனிதர்கள் கூடி வாழும் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள், தாக்கங்கள், கருத்து முரண்பாடுகள் என்பன காணப்படுகின்றன. அவை சமூக, அரசியல், பொருளாதார மற்றும் ஆன்மீக வழிகளில் ஏற்படுகின்றன. இவற்றின் நடைமுறைகள் தவறும்பட்சத்திலே சமுதாயத்தில் பிரச்சினைகள் தினம் தினம் உருவாகின்றன. அந்தவகையில் இன்று உலகலாவிய ரீதியில் முதன்மை பெற்ற ஒரு பிரச்சினையாக "போதைப்பொருள் பாவனை" காணப்படுகின்றது. அதனை ஒரு வீதி நாடகத்தின் ஊடாக சு. சந்திரகுமாரினால் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை அடையச் செய்வது இங்கு பிரதானப்படுத்தப்படுகின்றது. வீதி நாடகம் சமூகத்தில் தாக்கம் செலுத்தும் ஒரு பிரச்சினையை*

CC BY , | Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

மையப்படுத்தி அதன் ஊடாக மக்களை விழிப்படையச் செய்வதாக காணப்படும். போதைத்துரை நாடகமானது சமகாலத்தில் போதைப் பொருட்களின் பாவனையால் சமூகத்தில் ஏற்படுகின்ற சீரழிவினையும், உடல் உள ரீதியான பிரச்சினைகளையும் விழிப்புணர்வூட்டும் வகையில் நாடகத்தின் வசன அமைப்பும், உரையாடல், பாடல்கள், விளையாட்டுக்கள், காட்சி அமைப்புக்களும், வேடஉடை ஒப்பனைகளும், இசை, ஒலியமைப்புக்கள், நிகழ்வெளி போன்றனவும் காணப்பட்டது. சு. சந்திரகுமாரே போதைத்துரை நாடகத்தை எழுதி வீதி நாடகமாக நெறியாள்கை செய்தார். ஆற்றுகைக்கான ஒத்திகை காலத்தின் போது நடிப்பு, ஆடல்முறை, உடலசைவு, வசனம், பேசும்முறை (உரையாடல்) என்பனவற்றை நெறியாளர் சிறந்த முறையில் பயிற்றுவித்தார். இதில் இந்த ஆய்வாளர் ஒரு பாத்திரம் ஏற்று நடித்தார்.

"அரங்க தயாரிப்பு" என்பது 'நாடகக் கலைப்படைப்பினை மேடையேற்றுவதற்கான அடிப்படைகளை தோற்றுவிப்பதுடன் கலைப்பெறுமானங்களுக்கான பொருத்தமான சூழல்களைத் திட்டமிடுவதற்கான முகாமைத்துவச் செயற்பாடு எனலாம்.' நாடகாசிரியரால் எழுதப்பட்ட எழுத்துருவை உயிரோட்டமுள்ள ஒரு கலைப்படைப்பாக மேடையில் படைப்பதற்கு அனைத்து விதமான செயல் ஒழுங்குகளையும் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தும் செயற்பாடு அரங்க தயாரிப்பு எனப்படும். இத்;தயாரிப்பில் பல்வேறு கலைஞர்களின் ஒன்றிணைந்த பங்களிப்பு காணப்படும். இச்செயற்பாட்டில் இணைத்து செயற்படுவர். இதில் அடிப்படை பொறுப்பை வகிப்பவர் நாடகாசிரியர் ஆவார்.

ஒரு சமூகப் பிரச்சினையை பல பாத்திரங்களினூடாகவும், உரையாடல், பாடல், ஆடல், கவிதை, விளையாட்டு, பழமொழிகள் என பலதரப்பட்ட உத்திகளைக் கையாண்டு யதார்த்தத்திற்கு மாறான ஒரு நடிப்பில் பல அரங்க உத்திகளையும் கையாண்டு ஒரு நாடகக் கட்டமைப்போடு, அந்தந்த பிரதேசத்தின் சூழமைவு, ஒழுங்குகள், எண்ணங்கள், பண்பாடுகள், மொழி என்பவற்றிற்கு அமைய எழுத்துருவின் துணை கொண்டு பார்வையாளர்கள் முன் அப்படைப்பை செம்மைப்படுத்தி மேடையேற்றுவது வரையான ஒரு திட்டமிடப்பட்ட செயற்பாடே "யதார்த்த விரோத அரங்க தயாரிப்பு" (சந்திரகுமார். சு, 2026, ப. 16) ஆகும்.

போதைத்துரை வீதி நாடகமானது ஆரம்பத்தில் ஆடல், பாடலுடன் இணைந்தும் உடல் மொழிகள் இணைந்தும் நிகழ்த்தப்பட்டது. ஆற்றுகை செய்வோர் அப் பாடல்களிற்கும், தாளத்திற்கும் ஏற்ப அதன் அர்த்தங்களை அல்லது கருத்துக்களை சபையோருக்கு வெளிப்படுத்துவர். அர்த்தங்களிற்கு அமைய ஆட்டக்கோலங்களின் வடிவங்களும் மாற்றம் பெறும். அவை பார்ப்பவர்களுக்குச் சரியான கருத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. அத்தோடு பறை, சங்கு, தாளம், மத்தளம் எனப் பல இசைக்கருவிகளின் இணைவும் காணப்பட்டது.

**"போதை, போதை, போதை கொடுமையான போதை...."**

**"போதையால் மனித வாழ்க்கைச் சிதறடிக்கப்படுகுதே...."**

**"மாணவர்கள் போதையைக் கையாள்வதைத் தவிர்க்கனும்...."**

**"மானிடத்தை அழிக்க வந்த அணுவாயுதம் போதையே…." (சந்திரகுமார். சு, 2023, ப. 57)**

போன்ற பாடல் வரிகள்மூலம் போதைப்பொருள் பற்றிய முழுமையான எண்ணக்கருவும், அதனால் ஏற்படும் தீமைகள், தூண்டப்படும் வழிகள், அதற்குக் காரணமானவர்கள். அதனால்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

பாதிக்கப்படுபவர்கள் என போதையின் ஒட்டுமொத்த அழிவையும் படம் பிடித்துக் காட்டியதுடன் அவை ஆற்றுகையாகப் பார்வையாளருக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து இவ்வீதி நாடகத்தின் கதையோட்டத்தையும் நடைபெறும், நடைபெறப்போகும் கதைகளையும் சபையோருக்கு அறியக் கொடுப்பதற்கு இரண்டு கட்டியக்காரர்கள் பங்குபற்றினார்கள். இவர்களின் வரவு "சங்கிலி புங்கிலி கதவைத் திற நான் மாட்டன் வேங்கை புலி..." (சந்திரகுமார். சு, 2023, ப. 57) என்ற பாடலிற்கும், தாளத்திற்கும் எற்ப அமைந்து காணப்பட்டது. இவர்கள் சபை நடுவே வந்து "போதை போதை போதை எங்கும் போதை எதிலும் போதை..." (சந்திரகுமார். சு, 2023, ப. 57) எனத் தமது உரையாடலை ஆரம்பித்து முன்னர் நிகழ்ந்த அப்பாடல்களின் ஆற்றுகையை சுட்டி போதையின் கொடுமையை பார்த்தீர்களா? என சபையோரை நோக்கி வினாவுகிறார்கள்.

எம்மையும் எம் இனத்தையும் சுற்றி நடக்கும் பெரும் ஆயுதப் போர் இந்தப் போதை எனவும், இது கண்ணுக்குத் தெரியாது. ஆனால் பேரழிவைத் தரும். அத்தோடு இப் போதை பாடசாலை மாணவர்களை இலக்கு வைக்கிறது எனவும், அதற்கு காரணம் அவர்கள் எதிர்காலத்தில் நமது நாட்டையும், இனத்தையும், கல்வியையும் வளர்ப்பவர்கள் எனவும் கூறிச் செல்வர். இது நாளைய தலைவர்கள் இன்றைய இளைஞர்கள் எனும் விழிப்புடன் கூறப்பட்டது. பாடசாலையே கல்வியறிவை வளர்க்கும் இடம். அவ்விடத்தைக் கெடுத்தால் அச்சமூகம் அழிக்கப்படும். இதற்காகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் அவை விற்கப்படுகின்றது எனவும், போதையின் அழிவு யாரை மையப்படுத்தி நிற்கின்றது என்பதையும் இவ்விரு கட்டியக்காரர்களும் தமது உரையாடல் மூலம் அழுத்தி, தெளிவான விளக்கத்தை சபையோருக்கு வழங்கினார்கள்.

அப்படியே "ஆடும் புலியும்" எனும் ஒரு விளையாட்டின் மூலம் (ஆற்றுகையின் மூலம்) பெற்றோரைத் தாண்டி போதைத்துரை அப்போதைப் பொருளை எப்படிப் பிள்ளைகளுக்கு வழங்குகின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றது. இதற்காக பெற்றோர்கள் சங்கிலியாகவும், பிள்ளைகள் ஆடுகளாகவும், போதைத்துரை புலியாகவும் பாவனை செய்து அவர்கள் பார்ப்போருக்குள் நின்று வருகை தந்து அவ்விளையாட்டை நாடகக்கருவிற்கு அமைய விளையாடினார்கள். அங்கே போதைத்துரைக்கும், பெற்றோர்களுக்குமான உரையாடல் நிகழ்த்தப்படுகின்றது. பெற்றோரிடம் போதைத்துரை "நான் போதைப் பொருட்களை உங்கள் பிள்ளைகளுக்கு கொடுத்து எனக்கு அடிமையாக்குவேன்" (சந்திரகுமார். சு, 2023, ப. 60) எனக்கூறி அதன்படி கதை வளர்க்கப்பட்டு பெற்றோர் பிள்ளைகள் மீது நம்பிக்கை வைத்திருப்பதாகவும், அவர்கள் நல்லவர்கள், இப்படிப்பட்ட செயல்களை செய்யமாட்டார்கள் எனவும் இவ்விளையாட்டின் ஊடாக உரையாடப்படுகின்றது.

ஆடும் புலியும் விளையாட்டில் போதைத்துரை சங்கிலியாக இருக்கும் பெற்றோரை விடுத்து உள்ளே இருக்கும் பிள்ளைகளிடம் போக முயற்சித்தல், பெற்றோர் தடுத்தல், பின்பு போதைத்துரை சங்கிலியை உடைத்து உள்ளே சென்று தப்பி ஓடும் பிள்ளைகளை எட்டிப் பிடிப்பர், (இரண்டு தடவை சங்கிலி உடைக்கப்பட்டு பிள்ளைகள் துரத்தப்பட்டு பின்பு பிள்ளைகள் பெற்றோரின் பாதுகாப்பிற்குள் வருவதாகக் காணப்படும்), பெற்றோரின் பாதுகாப்பு சங்கிலிக்குள் பிள்ளைகள் வந்ததும் அதற்குப் பிறகு அங்கு பெற்றோர்கள் இருக்கமாட்டார்கள். அவர்கள் தமது வேலை, உழைப்பு, பண ஆசை, சொத்து சேர்த்தல், வெளிநாடு செல்லல், தம்மை அழகுபடுத்தல், தங்களைப் பற்றி மட்டும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

*சிந்திப்பதான ஒரு நிலை போன்ற காரணங்களால் அவர்கள் வெளியேறுகிறார்கள். இதன்மூலம் கூற முற்படும் விடயம் யாதாயின், "பெற்றோர் இவ்வாறு பிள்ளைகளை அன்பின் பிடியிலிருந்தும்;, கண்காணிப்பில் இருந்தும் விடுவித்தால் அங்கே பிள்ளைகள் போதைத்துரையின் சதித்திட்டதில் வீழ்த்தப்படுகின்ற நிலைமை ஏற்படுகின்றது என்பதாகும்" (சந்திரகுமார். சு, 2023, ப. 62) இதனை இவ்விளையாட்டுமூலம் போதைத்துரை வீதி நாடகம் எமக்குக் கூறுகின்றது.*

*பிள்ளைகள் போதைத்துரையின் பிடியில் வீழ்த்தப்படுகின்றனர். போதைத்துரை அவர்களைப் பார்த்து ஆணவத்துடன் சிரித்துக்கொண்டு மயக்கிவிட்டேன் எனக் கூறுகின்றது. அப்படியே போதை மனிதர் பிள்ளைகளைச் சங்கிலியால் இழுத்துச் செல்வார். (சங்கிலி புங்கிலி பாடல் பாடி இழுத்துச் செல்லல்). கட்டியம் கூறுவோர் தொடர்ந்து உள்ளே வருவர். விளையாட்டின்மூலம் கூறப்பட்ட விடயத்தை சுட்டிக்காட்டி பெற்றோர் தமது வேலைப்பழு, அதிக பணம் சம்பாதித்தல், அரசாங்க சம்பளம்காணாது தனியார் விற்பனை நிலையங்களை உருவாக்கி உழைத்தல், வெளிநாடு போதல், வறுமையால் தினம் உழைப்பிற்கு செல்பவர்கள் என்ற பல நோக்கங்களால் தமது பிள்ளைகளுக்கான அன்பு, பாசம், கண்காணிப்பு என்பவற்றை வழங்கத் தடைப்படுகின்றனர். இதனால் பிள்ளைகள் வேறு வழிகளில் அந்த அன்பு, பாசத்தை தேடுகின்றார்கள் என கட்டியம் கூறுபவர்கள் இருவரும் தமது உரையாடல்மூலம் கூறுகின்றார்கள்.*

*அத்தோடு பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனை செய்யப்படும் போதைப் பொருட்களின் பெயர்களாக "கஞ்சா, ஐஸ், ஹெரோயின், குடு, கொக்கைன், சுண்ணாம்பு, புகையிலை" போன்றனவும் இவர்களால் கூறப்படுகின்றது. தொடர்ந்து ஓர் உத்தியோகக் குடும்பத்தின்மூலம் (கண்காணிப்பு இல்லாத குடும்பம், பண பேராசை கொண்ட குடும்பம்) அங்கு பிள்ளைகள் சந்திக்கும் விடயங்கள் காட்டப்படுகின்றது.*

*ஒரு உத்தியோகக் குடும்பம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. தாய் - எஞ்சினியர், தந்தை – வைத்தியர், மகன், இரண்டு மகள்கள் (மாணவர்கள்) போன்றோர் காணப்படுகின்றனர். இங்கே பெற்றோர்கள் பிள்ளைகள்மீது அக்கறையின்றி அனைத்து வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி அவர்களின் நடத்தைகளை கண்காணிக்காது தமது தொழிலிலும் உழைப்பிலும் பணத்தின் மோகத்தாலும் விலகிக் காணப்படுகின்றனர். இதனால் பிள்ளைகள் சரியான கவனிப்பின்மையால் அவர்கள் போதையினூடாக அழிவை நோக்கி நகர்கின்றார்கள். அவர்களுக்கான கையடக்கத் தொலைபேசி, மடிக்கணனி, பணம் என்பன கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு பெற்றோர் பிள்ளைகளுடன் நேரத்தைப் பகிர்ந்து அவர்களின் உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்காது விடுகின்றனர். இதனால் பிள்ளைகள் போதையினால் அன்பு, மகிழ்வான வாழ்க்கை என்பன கிடைக்கின்றன என தமது வாழ்க்கையை அதற்குள் மாய்க்கின்றனர் எனக் இக்குடும்பத்தினூடாகக் காட்டப்படுகின்றது (சந்திரகுமார். சு, 2023).*

*தொடர்ந்து இக்குடும்பம் அறிமுகமாக, தந்தை (மூர்த்தி), தாய் (சித்திரா) இருவரது உரையாடல்மூலம், தந்தை ஒரு சேயறி செய்ய அவுஸ்திரேலியா போக வேண்டி இருக்குது என்பதும், சித்திரா அதற்கு காசு தானே நமக்கு முக்கியம் நீங்க போக றெடி ஆகுங்க என்பதும், தனக்கும் ஒரு புரொஜட் வேலை இருக்குது முடிச்சுக் கொடுத்தால் ஒரே நேரத்தில இரண்டு பேருக்கும் இலட்சக் கணக்கில காசு கிடைக்கும் (சந்திரகுமார். சு, 2023) என்று கூறுவதும் மூர்த்தி, நம்மட பிள்ளைகள் எனக் கேட்க அதற்கு*

சித்திரா அவங்களுக்கு லெப்டொப், போன் இருக்கு. மற்றைய எல்லா வசதிகளும் இருக்கு. காசு நிறைய இருக்கு. அவங்க வழமைபோல அவங்க வேலையைப் பாப்பாங்க.! பார்க்கட்டும். நீங்கள் வெளிக்கிடுங்கோ எனக் கூறுகிறார். (மூர்த்தி போகிறார்).

தொடர்ந்து வீட்டின் கடைசி மகள் துளசி போனுடன் அதிக நேரத்தைச் செலவழிப்பதுடன் செல்பி எடுத்துப் பார்க்கிறாள். அது சரியில்லை என்றதும் புதிய செல்போன் வாங்கி தரும்படி தாயாரைக் கேட்கிறார். அப்போது தாயார் உடனே ஒன்லைன்ல ஓடர் பண்ணுகிறார். இதனைக் கேட்டதும் மகள் இனி நான் போட்டோவும் எடுப்பன், மற்ற மற்ற விசயங்களையும் பார்ப்பன் என மகிழ்ச்சியுடன் கூறுகிறாள். தொடர்ந்து மூத்த மகள் சிந்து தாயிடம் சென்று சாப்பாடு வெளியில் எடுப்பதற்கு கிறடிட் காட் கேட்க தாய் உடனே அதைக் கொடுக்கிறார். மூத்த மகன் விஜய் போதைப் பொருள் அதிகம் பயன்படுத்துபவனாகவும், வீட்டில் இவன் பற்றிய எந்தக் கண்காணிப்பும் இல்லாதவனாகவும் காணப்படுகின்றான். தொடர்ந்து தங்கைக்கு ஏதொவொரு போதைப்பொருள் கொடுத்து இதனை ரேஸ்ட் பண்ணிப்பார். இது ஞாபக சக்திக்கான அருமருந்து, வகுப்பில் முதலாம் பிள்ளையாகவும் வருவாய் எனக் கூறி கொடுக்கின்றான்.

அதனை வாங்கிய துளசி மணந்து பார்த்தபடி நிற்க சகோதரி வருகை தந்து அதனைப் பற்றிக் கேட்கிறார். அவருக்கும் அது பற்றிய ஒரு தெளிவும், பயன்படுத்திய பழக்கமும் இருக்கிறது என்பது இருவரின் உரையாடல் மூலமும் காட்டப்படுகின்றது. பின்பு மூவரும் அதனை ஒன்றாகச் சேர்ந்து உண்கிறார்கள். போதை நிலையை அடைகிறார்கள்

இரண்டாவதாக ஒரு குடும்பம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. தாய் (ரஞ்சிதம்), தந்தை (மகேஸ்வரி), மகள் (சுயா), மகன் (கார்திக்). பிள்ளைகள் மீது அவர்கள் பாசம், அக்கறை காட்டினாலும் அவர்களுக்கு அங்கே வறுமை காணப்பட்டது. அதிக கண்டிப்பு, அடக்கு முறையும் நிலவுகின்றது. அதுவும் பெரும் பாதிப்பாக அமைகின்றது. வகுப்பிற்குக் காசு கட்டுவதற்குப் பணம் இல்லை. அது பற்றிய உரையாடல் நிலவுகின்றது. தொடர்ந்து அவர்கள் வகுப்பிற்குச் செல்கின்றார்கள். அங்கே வசதி படைத்த முதல் குடும்பத்துப் பிள்ளைகளைக் காண்கின்றார்கள். செல்பி எடுக்க முற்படுகின்றார்கள். அப்போது துளசி என்ற பிள்ளை தனது விலையுயர்ந்த "ஐ போனில் செல்பி எடுப்போம் எனக் கூறி அதன் விலை ஐந்து அரை இலட்சம் என்பதையும் கூறுகிறாள்" (சந்திரகுமார். சு, 2023, ப. 68) அதனைக் கேட்டு வசதியற்ற இரு பிள்ளைகளும் கவலைப்படுகின்றார்கள். பின்பு ஐந்து பேரும் இணைந்து செல்பி எடுக்கிறார்கள். பின்பு விஜய் போதைப் பொருளை அவர்களுக்குள் பகிர்தல், இதனால் ஞாபக சக்தி அதரிகரிக்கும் என்டுராங்க எனக்கூற அனைவரும் அவனை நம்பி அதனைப் பயன்படுத்துகிறார்கள். போதைப்பொருள் எனத் தெரியாது மாணவர்கள் அதற்குள் அடிமையாகி அப்படியே பிள்ளைகள் தங்களது வீடுகளுக்கு செல்கிறார்கள்.

போதைத்துரை வரவு

"ராஜ ரஞ்சித 'பூமான் மன
வேகம் மிஞ்சிய கோமான்
தக தக என ஒலி பகலவன் என வர" எனும் பாடலுடன் வருகை தருகிறார்.
தொடர்ந்து "வந்தார் பாரீர் போதைத்துரை................" (சந்திரகுமார். சு, 2023, ப.69)

வன்கொடுமை செய்து உயிரை மாய்க்க வைப்பேன்" எனும் 24 பாடல் வரிகள்மூலம் தன்னுடைய

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

செயற்பாடுகள், தன்னால் ஏற்படுத்தக்கூடிய அழிவுகள், வன்செயல்கள் என்பவற்றை சபையோருக்கு பாடலின் தாளக் கட்டிற்கு ஏற்ப அசைந்தும் தனது உடல் அசைவினால் தெளிவுபடுத்துகின்றார். பின்பு தனது வாயால் தான் ஒரு போதைத்துரை, இவ்வுலகை அழிக்க வந்தவன், மாணவர்கள் கல்வியை சீர்குலைக்க வந்தவன், முதலாளிமார் வருமானத்தை அதிகரிக்க அவர்களுக்கு உத்தியாக இருக்கிறேன், இன விருத்தியை அழிக்க வந்தவன், பாடசாலை மாணவர்களை போதைக்கு அடிமையாக்கி அவர்களை வியாபாரியாகவும் மாற்றுவேன், சுய சிந்தனையைக் கட்டுப்படுத்துபவன், தாழ்வு மனப்பாங்கு, கற்றலின்போது இடை விலகல், உடல் உளச் சோர்வு, தற்கொலை, இதற்காகச் செல்போன் பாவனையை அதிகரித்தேன், இதனால் பாதிக்கப்பட்டோரை என்னை நாடச் செய்வேன், பணக்கஷ்டம் வந்தாலும் என்னை நாட வைப்பேன், நான் தான் போதை, இதனால் நரம்புத்தளர்ச்சி, சிறுநீரகப் பாதிப்பு, உயர் குருதி அழுத்தம், புற்றுநோய், கண்பார்வைக் குறைபாடு, ஏனைய நோய்களை வழங்குவேன் என தன்னைப் பற்றி தானே வாயால் கூறுகிறது. (சந்திரகுமார். சு, 2023).

தொடர்ந்து குட்டிப் போதைத்துரையின் வரவு காட்டப்படும். அவர்கள் இருவரும் பாடல் பாடி பறை அடிக்க அதற்கேற்ப ஆடிப்பாடி அரங்கிற்குள் நுழைவார்கள். அவர்கள் சமூக விரோதச் செயல்களை செய்வதற்கு ஊக்குவிப்பவர்களாகவும், திருட வைத்தல், வன்நடத்தைகளை அதிகரித்தல், வன்புணர்வை ஏற்படுத்தல், சாதாரண மனித வாழ்வுக்குப் புறம்பான பிறழ்வுகளைச் செய்ய வைத்தல், தனிமனிதன், குடும்பம், சமூகம் பாதிப்படைய வைப்போம், நாங்கள் மாணவ சமூகத்தை அழிப்போம். அரசியல்வாதிகள், குருமார்கள், கல்விமான்களுக்கு உதவுவோம். பாலியல் சம்பவங்களை அதிகரிக்கச் செய்தல், வெளிநாட்டு மோகம், பண்பாட்டுக் கலப்பு, நாகரிக வளர்ச்சி போன்றவற்றை அதிகரிப்போம். இனிப்புப் பண்டம், ஐஸ்பழம், சிற்றுண்டிச்சாலை, பேனை மூடி, நக இடுக்குமூலம் போதையைக் கொடுப்போம். எனப் பல்வேறு செயற்பாடுகளை செய்பவர்களாகவும், செய்விப்பவர்களாகவும் இக்குட்டிப் போதைத்துரைகள் தங்களை அறிமுகப்படுத்துகிறார்கள்.

தொடர்ந்து போதையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளில் பிரதானமானவராகக் காணப்படும் விஜய் என்ற பையன் குட்டிப்போதைத்துரையால் பெரிய போதைத்துரையின் கட்டளைக்கு இணங்க அவரை அழைத்து வந்து மேலும் போதைக்குட்படுத்தி தம் வசப்படுத்துவார்கள். (சீலையால் வட்டமாக முடிக்கப்பட்ட பகுதிகளை தலையில் இட்டு தம்வசம் வைத்திருத்தல்) விஜய் தனது பழக்கத்தைப் பழகியவர்களையும் தன்னுடன் இணைத்து அப்போதைத்துரைக்குகீழ் அடிமைப்படுத்துகிறான். அப்பிள்ளைகள் ஐவரும் அடிமையாகி சுயநினைவின்றி போதையால் பாதிக்கப்பட்டவர்கள் செய்யும் அனைத்து செயற்பாடுகளையும் செய்தபடி போதைப்பொருளை உண்டு மயங்கி விழுகின்றனர். அப்போது பெற்றோர் அவர்களைத் தேடிச் செல்கிறார்கள். (வசதியற்ற குடும்ப பெற்றோர்) அவர்கள் பிள்ளைகளின் நிலை கண்டு வருந்துகிறார்கள். புலம்புகிறார்கள், தொடர்ந்து அவர்கள் தொலைபேசியை எடுத்து வைத்தியருக்கு அழைப்பை விடுத்து பிள்ளைகள் அனைவரும் இங்கே மயங்கிக் கிடக்கிறார்கள் விரைவாக வந்து பாருங்கள் எனக்கூறுகின்றனர்.

வைத்தியர் வருகை தந்து அவர்களை சோதித்துப் பார்த்து விட்டு போதையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்து இது ஐஸ் போதைப் பொருளால் நடந்துள்ளது. உடனே வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் எனக்கூறி சில அறிவுரைகள் கூறுகின்றார். சமகாலத்தில் பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் போதையினூடாக இலக்கு வைக்கப்படுகின்றார்கள். இதனால் (12-

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

*24) வயதினர் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். இதனால் பல இன்னல்களை அனுபவிக்கின்றார்கள். மேலும் போதையை ஏற்ற சிறிய வகை ஊசிகள்மூலம் தமது இந்த இரத்த நாளத்தில் போதைப் பொருளை உட்செலுத்துகின்றனர், கிருமித்தொற்று உட்செல்வதால் அதிக இறப்பு வருகின்றது, இதனால் நுரையீரல், இதயம் என்பன பாதிக்கப்பட்டு மாரடைப்பும். ஈரல் அலற்சியும் ஏற்படும் எனவும் இப்படி நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைக்கு அதிக தொழிநுட்ப மருத்துவ உபகரணம் தேவை அத்துடன் பல மில்லியன் ரூபாயும் செலவாகும் எனவும் கூறுகிறார்.*

*அத்தோடு யுத்தத்தின் பின்னர் சிறுபான்மை மக்களை அழிக்கும் பாரிய தொட்டுணரா ஆயுதம் எனவும் கூறுகிறார். அத்துடன் சிகிச்சை வழிமுறைகளாக, போதைப் பொருள் நுகர்வோருக்கு சிகிச்சை அளித்தல், குற்றவாளியாகப் பார்ப்பதை நிறுத்தல், கண்காணிப்பு சூழலை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளை செய்தல் வேண்டும் எனவும் கூறி உள நெருக்கடியில் ஏற்படும் பாதிப்புக்களையும், நோய்கள், அறிகுறிகள், என்பவற்றையும் மருத்துவர் சபையோருக்கு தெளிவாகக் கூறுகின்றார். தொடர்ந்து வைத்தியர் காவல் துறையினருக்கு இச்சம்பவத்தை அறியக்கொடுக்கின்றார்.*

*காவல்துறையினர் இருவர் அச் சம்பவ இடத்திற்கு வருகை தருதல், அவர்கள் சட்டவிரோதமான செயற்பாடுகளையும், பெற்றோர்கள் பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகள், இப்போதையால் குடும்பத்தில் சகோதர உறவுகள் என்று கூட தெரியாது நடைபெறும் வன் நடத்தைகள், சில பெற்றோரின் தகாத செயற்பாடுகள், இப்போதையால் இதுவரை சமூகத்தில் ஏற்பட்டுள்ள கொடூரசம்பவங்கள் என்பன பற்றி உரையாடல்மூலம் பார்ப்போருக்கு கூறுகிறார்கள். இதனால் தொடர் கண்காணிப்பு வலையமைப்பு, விநியோகம் தொடர்பான தகவலை வழங்க பொறிமுறை என்பவற்றை வகுத்துள்ளமை பற்றியும் கூறுகின்றனர். இது பற்றிய தகவல்களை அறிவிக்க வேண்டும் எனவும், போதையைக் கட்டுப்படுத்த மக்கள் பிரிதிநிதிகள் இணைந்ததாகவும், போதைக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அழிக்க வைத்தியத்துறை, நீதித்துறை, சட்டத்துறையுடன் இணைந்து செயற்படுவதாகவும், போதையை ஊக்குவிக்கும் சமூக ஊடகங்கள், இணையத்தளங்கள் தடை செய்யப்படுகின்றது எனவும் பல கருத்துக்களை மிகவும் தெளிவாக சபையோர் முன் கூறுகின்றனர்.*

*இதனைத் தொடர்ந்து கட்டியக்காரர் இருவரும் வருகை தந்து போலிசை நோக்கி, உங்களை நம்பலாமா? பொது மக்கள் நம்பிக்கை வைக்கலாமா? எனக் கேட்கின்றனர். நீங்கள் கடமையைச் சரியாகச் செய்தாலும் அரசியல்வாதிகள், குட்டி முதலாளிகள் தானே விற்பனை செய்கிறார்கள். அவர்கள் விட மாட்டார்களே எனக்கூறி கேள்வி கேட்கிறார்கள். அதற்கு பொலிஸ், உங்கள் கேள்வி நியாயமானது சில அதிகாரிகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் தான். ஆனால் நிச்சயமாக போதை வலையமைப்பைக் கண்டுபிடித்து ஒழிப்பதில் நாங்கள் பெரும் துணை புரிகிறோம் எனப் பொலிஸ் கூறுகிறார். அதற்குக் கட்டியம் "போதைப் பரவலாக்கத்தை காவல் துறையினரால் தடுக்க முடியும். ஆனால் முக்கியமாக மக்களால் தான் அதன் பாவனையை நிறுத்த முடியும்" (சந்திரகுமார். சு, 2023, ப. 84). இறுதியில் "மக்களால் தான் அதன் பவனையை நிறுத்த முடியும், ஒழிக்க முடியும்" (சந்திரகுமார். சு, 2023, ப. 85) எனக்கூறி அனைவரும் போதை ஒழிப்பு சம்மந்தமான பதாதைகளை ஏந்திக் கொண்டு இறுதிப் பாடலைப் பாடிக் கொண்டு நிகழ்விடத்திற்கு வந்து விழிப்புணர்வை ஏற்படுத்துவர். "ஒழித்திடுவோம் போதையை ஒழித்திடுவோம்---- மனிதரை ......" நாடகம்*

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

நிறைவடைகின்றது.

**நாடகத் தலைப்பும் அதன் அர்த்தப்பாடும்**

நாடகத் தலைப்பு இன்றியமையாததாகும். வீதி நாடகமான போதைத்துரை நாடகத்தின் இத்தலைப்பானது இந் நாடகத்திற்கு மிகவும் பொருத்தமானதாகும். கதாபாத்திரத்தின் பெயரை நாடகத்தின் தலைப்பாக உருவாக்குவது இங்கு காணப்படுகின்றது. இதனை ஆங்கிலத்தில் "Pothaiththurai" என அழைப்பர். போதையின் ஒட்டுமொத்த எண்ணக்கருவையும் அடக்கியதாக இந்நாடகத் தலைப்பு காணப்படுகின்றது. போதைத்துரை நாடகத்தின் முழுமையைக் காட்ட இந் நாடகத்தின் பாத்திரங்கள், குறியீடுகள், பாடல்கள், பதாதைகள், கட்டியம் கூறுவோர் என பல கூறுகளும் ஒன்றிணைந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். அவை அனைத்தும் பின்னிப் பிணைக்கப்பட்டு நாடகத் தலைப்பின் முழுமையையும், பொருத்தப்பாட்டையும் பூர்த்தி செய்து ஆற்றுகையையும் முழுமை அடையச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

தற்காலச் சமூகத்தில் அதிகம் தாக்கம் செலுத்துகின்ற அல்லது பேசப்படுகின்ற ஒரு விடயத்தினை மக்கள் மத்தியில் எடுத்துக்கூறி மக்களை அதிலிருந்து விழிப்படையச் செய்யும் முகமாக இந்நாடகம் நாடக ஆசிரியரால் எழுதப்பட்டது. அந்தவகையில் தற்பொழுது சமூகத்தில் அதிகம் தாக்கம் செலுத்துகின்ற ஒரு விடயமாக போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. நவீன நாடக ஆற்றுகையில் மாத்திரம் இன்றி பாரம்பரிய ஆற்றுகையிலும் சிறந்து விளங்கும் கலாநிதி சு. சந்திரகுமார் அவர்கள் பாரம்பரிய கூத்துக்கலையில் இருந்த தாக்கத்தின் வெளிப்பாடுகளை இப் போதைத்துரை வீதிநாடகப்பாடல், பாத்திரவார்ப்பு, ஆட்டக்கோலங்களுக்கூடாக வெளிப்படுத்தியிருந்தார். விளையாட்டுக்கள், ஆடல், பாடல் என்பது அனைவருக்கும் பிடித்த விடயம் என்பதால் வெளிப்படுத்த வேண்டிய விடயங்களை இவற்றின் மூலம் வெளிப்படுத்தி அவற்றை மக்கள் மனதில் ஆழமாகப் பதியச் செய்தார். மேலும் இந் நாடகத்தயாரிப்பு "ஆற்றுகை மையக் கற்றலூடாகவே" நடந்தேறியது. சிறந்த நெறியாளர் ஒருவரின் நெறிப்படுத்தலில் அமைந்த இவ்வீதி நாடகம் பல்வேறு நடிகர்களை இனங்கண்டு கொள்ள மிகப் பெரிய வாய்ப்பாக அமைந்தது.

**உசாத்துணைகள்**

[1]. சந்திரகுமார், சு. (2023). "வீதி நாடகங்கள் பனுவலும், ஆற்றுகையும்". அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவை. மட்டக்களப்பு. இலங்கை.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.